# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006**

**தமிழ்மொழி**

**வினாத்தாள் - பகுதி 1**

**ஆண்டு 9** **சுட்டெண்:..........................................** **நேரம்: 35நிமிடங்கள்**

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, கூடு இடப்பட்ட விடைத்தாளில், விடைக்கான இலக்கத்தின் மீது புள்ளடி இடுக.**

1. புதியதொரு வீடு நாடகத்தின் ஆசிரியர்:

   (1) அ. முத்துலிங்கம் (2) து. உருத்திரமூர்த்தி (3) பாரதியார் (4) பாரதிதாசன்

2. நாற்று என்பது:

   (1) விளைந்த பயிர் (2) இளம்பயிர் (3) வாடிய பயிர் (4) முளைபயிர்

3. காலமழை என்பது:

   (1) பருவமழை (2) கோடைமழை (3) சூறாவளிமழை (4) உகைப்புமழை

4. அடுக்குத்தொடருக்கு எடுத்துக்காட்டு:

   (1) நடுநடுங்கி (2) தன்னந்தனி (3) சின்னஞ்சிறிய (4) உயரஉயர

5. அடுக்கிடுக்குத் தொடருக்கான எடுத்துக்காட்டு:

   (1) வெட்டவெளி (2) சுடச்சுட (3) ஓடஓட (4) ஆடிஆடி

6. பாகாச் சொல்லுக்கு சரியான எடுத்துக்காட்டு:

   (1) தமிழர் (2) காவலன் (3) மலர் (4) உண்டான்

7. பகுசொல்லில் வரும் பகுதியையும், இடைநிலையையும் இணைப்பது:

   (1) சாரியை (2) சந்தி (3) உருபு (4) விகாரம்

8. உண்டான் என்னும் பகு சொல்லைப் பிரித்தால்:

   (1) உண் + ட் + ஆன் (2) உண் + ட் + அன் (3) ஊண் + ட் + ஆன்

   (4) ஊண் + ட் + அன்

9. சிங்கள இனம் தோன்றக் காரணமான இந்திய வந்தேறியின் பெயர்:

   (1) மாகன் (2) பாண்டுரங்கன் (3) தீசன் (4) விஜயன்

10. சிங்கள இனத்தின் ஆதி இதிகாசம்:

   (1) சிலப்பதிகாரம் (2) மணிமேகலை (3) தீபவம்சம் (4) குண்டலகேசி

11. மொழி தோன்றக் காரணமாய் அமைந்தது:

   (1) காலமாற்றம் (2) சிந்தனைவளர்ச்சி (3) உணவுமுறை (4) தெய்வீக ஆற்றல்

12. ஈழத்தின் முதற்குடிகள்:

(1) தமிழர் , சோனகர் (2) சோனகர் , சிங்களவர் (3) தமிழர், வீரர்

(4) இயக்கர் , நாகர்

13. மகாவம்சத்தில் கூறும் விஜயனின் மனைவியின் பெயர்:

(1) சந்திரிக்கா (2) குவேனி (3) சிங்கவல்லி (4) தாரணி

14. சிங்கள மொழியின் மூலமொழி:

(1) தமிழ் (2) தெலுங்கு (3) எலு (4) கன்னடம்

15. ஈழத்தின் நாகரிக வளர்ச்சிக்கு வித்திட்ட மக்கள்:

(1) சிங்களவர் (2) வடவர் (3) சோனகர் (4) தமிழர்

16. கெடுதல் விகாரத்துக்குச் சரியான எடுத்துக்காட்டு:

(1) பற்பொடி (2) வட்டமேசை (3) தமிழ்ப்புலவர் (4) பொற்குடம்

17. பால்கொண்டு மடுப்பவும் உண்ணான்---- இப்பாடல் இடம்பெறும் நூல்:

(1) புறநானூறு (2) அகநானூறு (3) மணிமேகலை (4) சிலப்பதிகாரம்

18. மகாவம்சம் எழுதப்பட்ட மொழி:

(1) துளு (2) பாளி (3) சிங்களம் (4) தமிழ்

19. மகாவம்சம் என்ற நூலை எழுதியவர்:

(1) டி.எஸ். சேனநாயக்க (2) சோமவன்ச (3) மகாநாம (4) ஜே.ஆர் ஜெயவர்த்தனா

20. எல்லாள மன்னனைப் போரில் வென்றவன்:

(1) சங்கிலியமன்னன் (2) துட்டகெமுனு (3) சேனன் (4) குத்திகன்

21. தமிழ் ஒலி மரபுக்கு மாறுபடாமல் வழங்கும் வடசொல்:

(1) தற்சமம் (2) தற்பவம் (3) தற்காலம் (4) தற்சமயம்

22. தளவாடம் என்பது:

(1) கன்னடமொழிச்சொல் (2) மராத்திமொழிச்சொல் (3) மலையாளமொழிச்சொல்

(4) ஒல்லாந்தமொழிச்சொல்

23. முதற்பொருள் என்று நிலத்தையும், பொழுதையுமே கொண்டவர்:

(1) கம்பர் (2) வள்ளுவர் (3) இளங்கோ (4) தொல்காப்பியர்

24. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை குன்றத்தில் பூக்கும் மலர்:

(1) முல்லை (2) ஆம்பல் (3) குறிஞ்சி (4) குவளை

25. சுனாமிப் பேரலையால் அழியுற்ற வீடுகளைத் திருத்தும் பணி முற்றுப்பெறாமல் உள்ளது. முற்றுப்பெறாமல் என்பதைக் குறிக்கும் இணைமொழி:

(1) அற்ப சொற்பம் (2) அரைகுறை (3) அங்கம் இங்கும் (4) அறம்மறம்

26. நிறையுணவை உண்பது சாலச் சிறந்தது. இதில்வரும் உரிச்சொல்:

(1) உண் (2) நிறை (3) சால (4) து

27. பெண்பால் காட்டும் விகுதி:

(1) அர் (2) ஆன் (3) அள் (4) து

28. கார்மேகம் அன்ன கூந்தலாள் இதில் வந்துள்ள உவமேயம்:

(1) கார்மேகம் (2) கூந்தல் (3) கருமைநிறம் (4) அன்ன

29. க் என்ற மெய்யின் இன மெல்லெழுத்து:

(1) ஞ் (2) ண் (3) ம் (4) ங்

30. இறந்தகால இடைநிலைகள்:

(1) ன், ந், ற், க் (2) ய், த், ட், ழ் (3) த், ட், ற், ன் (4) ப், வ், ல், ள்

(புள்ளிகள் 30)

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006

## தமிழ்மொழி

## விடைத்தாள் - பகுதி 1

**ஆண்டு 9** **சுட்டெண்:.............................................** **நேரம்: 30நிமிடங்கள்**

**பலதேர்வு வினாக்களின் கீழே தரப்பட்டுள்ள நான்கு விடைகளிலிருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து, இக் கூட்டுத்தாளில், அவ்விடைக்குரிய இலக்கத்தில் புள்ளடி (x) இடுக**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | 1 | 2 | 3 | 4 | 16. | 1 | 2 | 3 | 4 |
| 2. | 1 | 2 | 3 | 4 | 17. | 1 | 2 | 3 | 4 |
| 3. | 1 | 2 | 3 | 4 | 18. | 1 | 2 | 3 | 4 |
| 4. | 1 | 2 | 3 | 4 | 19. | 1 | 2 | 3 | 4 |
| 5. | 1 | 2 | 3 | 4 | 20. | 1 | 2 | 3 | 4 |
| 6. | 1 | 2 | 3 | 4 | 21. | 1 | 2 | 3 | 4 |
| 7. | 1 | 2 | 3 | 4 | 22. | 1 | 2 | 3 | 4 |
| 8. | 1 | 2 | 3 | 4 | 23. | 1 | 2 | 3 | 4 |
| 9. | 1 | 2 | 3 | 4 | 24. | 1 | 2 | 3 | 4 |
| 10. | 1 | 2 | 3 | 4 | 25. | 1 | 2 | 3 | 4 |
| 11. | 1 | 2 | 3 | 4 | 26. | 1 | 2 | 3 | 4 |
| 12. | 1 | 2 | 3 | 4 | 27. | 1 | 2 | 3 | 4 |
| 13. | 1 | 2 | 3 | 4 | 28. | 1 | 2 | 3 | 4 |
| 14. | 1 | 2 | 3 | 4 | 29. | 1 | 2 | 3 | 4 |
| 15. | 1 | 2 | 3 | 4 | 30. | 1 | 2 | 3 | 4 |

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**அரையாண்டுத்தேர்வு - கல்வியாண்டு 2005 - 2006**

**தமிழ்மொழி**

**வினாத்தாள் - பகுதி 2**

**ஆண்டு 9** **சுட்டெண்:............................................** **நேரம்: 120நிமிடங்கள்**

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

**1 கீழ்க் காணும் பகுதியைப் படித்து தரப்பட்டடிருக்கும் வினாக்களுக்கு முழு விடை எழுதுக.**

தமிழீழத்திலே பிறந்து , தமிழ் நாட்டிலே வாழ்ந்து தமிழ்த் தொண்டு புரிந்த பேரறிஞர் பலராவர். மெய்வருத்தம் பாராது ஏட்டுச் சுவடிகளை ஆராய்ந்து சிறந்த இலக்கண இலக்கிய நூல்களையும் முதன் முதலாக அச்சிட்டு தமிழகத்தாருக்கு வழங்கிய பெருமை யாழ்ப்பாணத்திலே தோன்றிய தாமோதரம்பிள்ளை அவர்களுக்கே உரியதாகும்..

நற்றமிழ்ப் புலமையும் நாவன்மையும் ஒருங்கே வாய்ந்து தமிழ்மொழிக்கும், சிவநெறிக்கும் அருந்தொண்டு செய்த ஆறுமுகநாவலரை அறியாதார் தமிழ் கூறும் நல்லுகத்தில் உளரோ? இன்னும் முத்தமிழில் நடுநாயமாக விளங்கும் இசைத் தமிழுக்கு விழுமியதொண்டு செய்த விபுலானந்தரும் தமிழீழத்தவரே. பழந்தமிழ் நாட்டிலே சிறந்த இசைக் கருவியாக விளங்கிய யாழின் திறத்தையும் தமிழிசையின் நலத்தையும் ஆராய்ந்து யாழ்நூல் என்னும் பெயரால் இசையுலகத்துக்கு அரியதொரு விருந்தளித்த அறிஞர் பெருமானை அறியாதார் அறியாதாரே.

1. இவ்வுரைப்பகுதியிற் கூறப்படும் பெரியார் மூவர் யார்? அவர்கள் எந்த நாட்டவர்?
2. தாமோதரம்பிள்ளை செய்த பெரும்பணி யாது?
3. நாவலரின் பணி யாது?
4. யாழ்நூல் இயற்றியவர் யார்?
5. அவரின் பணி எத்தகையது?

(10 புள்ளிகள்)

**2. கீழ்வரும் பாடநூல் வினாக்களுக்கு முழு விடை தருக.**

1. வெறி கொண்ட புயலின் செயலை விளக்குக.
2. கற்காலப் பண்பாட்டின் இரு கூறுகள் எவை?
3. வீரமகன் எதை மீட்கும் போரில் வீரச்சாவடைந்தான்?
4. மகாவம்சம் சுட்டெரிக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்ட சிங்கள வரலாற்றறிஞர் யார்?
5. புலவர் எவ்வாறு நாரையைப் புகழ்ந்தார்?
6. இலங்கையில் நாகரித்துக்கு வித்திட்டவர்கள் யார்?

(6 x 2½ = 15 புள்ளிகள் )

**3. கீழ்வரும் பாடலைப் படித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

பாட்டத்தில் வீழ்ந்தழிந்து பாழாகிப் போய்விடவே
கொள்ளைபோல் வந்து கொடுமை விளைவித்து
வெள்ளம் வயலை விழுங்கிற்று.......பின்னர் அது
வற்றியதும் ஓயா வலக்கரத்தில் மண்வெட்டி
பற்றி, அதோபார் பழையபடி கிண்டுகிறான்
சேர்த்தவற்றை முற்றும் சிதறவைக்கும் வானத்தைப்
பார்த்தயர்ந்து நிற்கும் பழக்கமற்றோன்
ஈண்டு முதலில் இருந்து முன்னேறுதற்கு
மீண்டும் தொடங்கும் மிடுக்கு.

1. பாட்டத்தில் வீழ்ந்தழிந்தது என்ன?
2. வயலை விழுங்கியது எது?
3. பழையபடி கிண்டுபவன் யார்?
4. சேர்த்தவற்றை முற்றும் சிதற வைக்கும் வானத்தை என்ற வரியை விளக்குக.
5. உழைப்பாளியின் மிடுக்கு மீண்டும் எவ்வாறு தொடங்குகின்றது?

(10 புள்ளிகள் )

**4. இலக்கண வினாக்களுக்கு விடை தருக.**

1. வீதிவீதியாக, குமுறிக்குமுறி ஆகிய இரு அடுக்குத் தொடர்களை வைத்து தனித்தனி வாக்கியங்கள் எழுதுக.
2. பின்வரும் சொற்களின் பகுதி, விகுதி என்பவற்றை எழுதுக.
   (1) செல்வாள் (2) உண்டான் (3) பெறுநர் (4) நடந்தனன்
3. சொற்புணர்ச்சியில் முக்கிய மூன்று விதிகளையும் எழுதி, ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக.
4. உரிச் சொற்கள் நான்கு எழுதுக.
5. பின்வரும் இணைமொழித் தொடர்களின் பொருளை எழுதுக.
   (1) அருமை பெருமை (2) ஏச்சுப் பேச்சு
   (3) பேரும் புகழும் (4) கங்குகரை

.

(15 புள்ளிகள்)

**5.. கீழ்வரும் வினாக்களுக்கு முழு விடை எழுதுக.**

1. புதியதோர் வீடு நாடகத்தை எழுதியவர் யார்?
2. ஒரு தாயின் தாலாட்டுப் பாடலை எழுதியவர் யார்?
3. போராட்டத்துக்குச் சென்ற பிள்ளையின் தந்தை எவ்வாறு வீரச்சாவடைந்தான்?
4. திசைச் சொற்கள் என்றால் என்ன?
5. தென்றல் எத்திசையிலிருந்து வீசும் காற்றாகும்?.

(5 புள்ளிகள்)

**6. கீழ்வரும் விடயங்களில் ஒன்றைத் தெரிவு செய்து, அதன் கீழுள்ள குறிப்புக்களின் அடிப்படையில் 175 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக.**

1. புலம் பெயர் நாட்டில் நான்

    வாழ்விடச் சூழல்
    பண்பாட்டுச் சூழல்
    பண்பாட்டுச் சடங்குகள்
    உணவு முறைகள்
    உறவுகள்
    பன்மொழி அறிவு
    தமிழின அடையாளம் பேணல்
    புலம்-தாயக வாழ்வு ஒப்பீடு

2. இலங்கையின் முதற்குடிகள்

    இயக்கர், நாகர், விஜயன் / புத்தர் வருகை - கல்யாணி, நாகதீபம் ,

    பாண்டியர் வருகை / மாயமனிதர்கள், பொய்ச்சான்றுகள்

    மூன்று கற்காலம் / தொல்லியல் ஆய்வுகள் / மகாவம்சம் / பொய்
    ஈழம் தமிழர் நாடு

3. தமிழீழம் எங்கள் தாயகம்

    ஈழத்தின் ஆதியினம் தமிழனம் / 1619 வரை சங்கிலி மன்னன் ஆட்சி

    1812 வரை பண்டாரவன்னியன் ஆட்சி /ஆங்கிலேயரால் இறுதியில் தமிழர் ஆட்சி இழப்பு

    1812 - 1848 வரை ஆங்கில ஆட்சி / 1848 ல் சுதந்திரம் வழங்குதல்

    சிங்களவரிடம் ஆட்சி ஒப்படைப்பு / ஈழத்தின் சுதந்திரம்

    தமிழர் உரிமைகள் பறிப்பு அழிப்பு / விடுதலைப் போரட்டம்

(15 புள்ளிகள்)